# சுடர் ஒளி

Registered as Newspaper

THE SUDAR OLI

සුඩර් ඔළි

28.10.2020 புதன்கிழமை


### புதினம் தெரியுமோ?

ஒரு உறைக்க ரெண்டு கத்தியை வைக்கேலாது பாருங்கோ. அப்பிடி வைச்சா அது உறைக்குத்தான் பாதிப்பு. அதுமாதிரித்தான் யாழ்ப்பாணத்தில நிலைமை கிடக்குது. முந்தி தியேட்டர்க்காரர் தனித் தவில் வாசிச்சுக் கொண்டிருந்தவர். இப்ப அமுல் பேபி தனித் தவில் வாசிச்சுக் கொண்டு திரிய வெளிக்கிட்டுட்டார். ரெண்டு பேரும் ஒரே நேரத்தில அதிகாரத்தில இருக்கிறதால அதிகாரிகள்

2

## இலங்கையை மையப்படுத்தி அமெரிக்கா –சீனா மோதல்

# கொழும்பில் வைத்து பீஜிங்கை எச்சரித்தார் மைக் பொம்பியோ



கொழும்பு, ஒக்ரோபர் 28

**“சீனா ஆக்கிரமிப்பு நோக்குடன் இலங்கையை மென்று வருகின்றது. இலங்கையின் நிலத்திலும், கடலிலும் இறையாண்மையை பகிரங்கமாகவே மீறி வருகின்றது” இவ்வாறு அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ எச்சரித்தார்.**

2

## CURFEW!

## ஊரடங்கு

கொழும்பு, ஒக். 28

மேல் மாகாணத்தினுள் உள்ளடங்கும் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் நாளை 29ஆம் திகதி நள்ளிரவு முதல் திங்கட்கிழமை அதிகாலை 5 மணி வரையில் ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் என்று இராணுவத் தளபதியும்

2

## பொறுப்புக்கூறலில் இருந்து தப்ப முடியாது இலங்கை

*ராஜபக்ச அரசிடம் பொம்பியோ இடித்துரைப்பு*

கொழும்பு, ஒக். 28

பொறுப்புக்கூறல் கடமையிலிருந்து இலங்கை ஒருபோதும் விலக முடியாது. இவ்வாறு ராஜபக்ச அரசிடம் இடித்துரைத்துள்ளார் அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ. உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நேற்றிரவு இலங்கை வந்த மைக் பொம்பியோ, இன்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்டோரைச் சந்தித்த பின்னர் கொழும்பில் ஊடகவியலாளர்களுடன் பேசினார். இதன்போதே

2

## போர்க்குற்றம் சாட்டப்பட்ட சவேந்திரவுக்கு விதிக்கப்பட்ட பயணத் தடை நீக்கப்படாது!

*அமெரிக்கா திட்டவட்டம்*



கொழும்பு, ஒக். 28

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா விதித்துள்ள பயணத் தடை தொடரும். இவ்வாறு அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ தெரிவித்தார். அவருடைய பயணத் தடையை விலக்கிக்கொள்வது

2



## அமெரிக்காவிடம் பிடிகொடுக்காது நழுவிய வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, ஒக். 28

இலங்கையின் இறைமையை சீனா பாதிக்கின்றது என்றும், அமெரிக்கா இலங்கையின் இறைமையை மதித்து இலங்கையுடன் உறுதிமிக்க பங்காளராகச் செயற்படத் தயாராக இருக்கின்றது என்றும் அமெரிக்க இராஜாங்க செயலர் தெரிவித்திருந்த நிலையில், பக்கச் சார்பற்ற அணிசேரா நாடாக இலங்கை

2A

## அபாயக் கட்டத்தில்
# கொழும்பு

### உண்மையை ஏற்றுக் கொண்டார் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

கொழும்பு, ஒக். 28

கொரோனா பரவல் காரணமாக கொழும்பில் குறிப்பிடத்தக்களவு அபாயநிலை உள்ளமை வெளிப்படையானது என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். எனினும் இதுகுறித்து உறுதியாக எதனையும் கூற முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

2

## மணிவண்ணனின் பதவி நீக்கத்துக்கு இடைக்காலத் தடை

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனை அந்தப் பதவியிலிருந்து நீக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தீர்மானத்துக்கு 14 நாள்கள் இடைக்காலத் தடை விதித்து யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் கட்டளையிட்டது. அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் யாழ்ப்

2



## மாலைதீவு புறப்பட்டார் பொம்பியோ

கொழும்பு, ஒக். 28

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்க இராஜாங்க செயலர் மைக் பொம்பியோ நாட்டிலிருந்து வெளியேறியுள்

2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

சுடர் ஒளி
மாலைப்பதிப்பு

# கொழும்பில் வைத்து பீஜிங்கை....

'பகிரப்பட்ட ஜனநாயக விழுமியங்கள் மற்றும் இறையாண்மை உரிமைகளைப் பயன்படுத்துவது பற்றி இலங்கைக்கு அமெரிக்கா வேறுபட்ட பார்வையை வழங்குகின்றது. ஆனால், சீனா அதற்கு மாறாக ஒரு வித்தியாசமான பார்வையை வழங்குகின்றது' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்டோரைச் சந்தித்த பின்னர் கொழும்பில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, நிலையான வளர்ச்சியுடன் இலங்கை மக்களுக்கு இறையாண்மையும் சுதந்திரமும் இருக்க வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகின்றது. ஒரு நட்பு நாடாக அமெரிக்கா அதைச் சரியாக வழங்குகின்றது என்று நாங்கள் நினைக்கின்றோம்.

ஆனால், சீனா ஆக்கிரமிப்பு நோக்கத்தைக் கொண்டுள்ளது. இலங்கையை அந்த நாடு வேட்டையாடுகின்றது.

இலங்கையில் சீனாவின் இருப்பு குறித்து பல ஆண்டுகளாக கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன. குறிப்பாக இலங்கைக்கான சீனாவின் நிதிப் பங்களிப்பில் வெளிப்படைத்தன்மை இல்லாதது குறித்த கவலைகள் நீடிக்கின்றன.

இலங்கையுடனான தனது உறவை மேலும் வலுவாக்க சீனா முயன்று வருவதை அமெரிக்கா கவனித்து வருகின்றது. கொழும்பில் நடந்த பேச்சின்போது இது தொடர்பாக நாங்கள் விவாதித்தோம்.

நான் இந்தியா, மாலைதீவு மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கும் பயணத்தை மேற்கொண்டுள்ளேன்.

அனைத்து மத மக்களும் மனித உரிமைகள் மதிக்கப்படும் அமைதியான தேசத்தில் ஒன்றாக வாழ வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகின்றது.

கடந்த வருடம் தனது வெற்றி உரையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனக்கு வாக்களித்தவர்கள் மட்டுமல்ல, அனைத்து குடிமக்களுக்கும் தான் ஜனாதிபதி என்று கூறினார். எங்கள் இரு நாடுகளும் முன்னேறும்போது, அமெரிக்கா அந்த வார்த்தைகளை உண்மையாகக் கருதுகின்றது- என்றார். (ஒ,22)

## புதினம் தெரியுமோ

பாடு தினம் தினம் திண்டாட்டம்தான். ஏறச் சொன்னா எருதுக்கு கோபம் இறங்கச் சொன்னா முடவனுக்கு கோபம் என்ற மாதிரி அதிகாரிகள் முழுசினம்.

இப்ப வீடுகளுக்கு கறண்ட் இணைப்பு இலவசமாகக் குடுக்கிறதுக்குரிய அனுமதி யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு வந்திருக்கு. ஆயிரம் பேருக்கு அப்படிக்கு குடுக்கிறதுக்கு பயனாளிகள் பெயர்ப் பட்டியலை தரச் சொல்லி வந்திருக்கு.

இதை அமுல்பேபியும், தியேட்டர் காரரும் மோப்பம் பிடிச்சுப் போட்டினம். அவை மோப்பம் பிடிச்சினையோ அல்லது கச்சேரில இருந்து வட்ஸ்அப்பில அனுப்பிறவை அனுப்பிச்சினமோ தெரியாது.

அமுல்பேபி தன்ர பெயர்ப் பட்டியலை பிரதேச செயலர்களிட்ட குடுத்து அந்தப் பட்டியலைத்தான் குடுக்கவேணும் என்று 'அன்பா' அடம்பிடிக்கிறாராம்.

அமுல்பேபியின் வாலுகளாக 4 பிரதேச செயலர்மார் இருக்கினம். அவை அமுல்பேபி தந்த பட்டியலை ஒரு எழுத்துப் பிசகுவிடாம அப்பிடியே குடுத்திட்டினமாம். மற்ற பிரதேச செயலர்மாருக்கு மனச்சாட்சி இடம்கொடுக்கேல்ல. அமுல்பேபி குடுத்த பட்டியல்லயும் நியாயமா உள்ள பயனாளிகளை மாத்திரம் பரிந்துரைச்சு அனுப்பினமாம். இதுக்கிடையில தியேட்டர்காரர் கச்சேரிக்கு 'ஸ்ரெய்ட்டா' ஒரு பட்டியலை குடுத்திட்டாராம். தான்தந்த பட்டியலுக்குத்தான் கொடுக்கவேணும் என்று அவர் ஆக்கினை குடுக்கிறாராம். இதால கச்சேரின்ர பெரிய தலை கொஞ்சம் குழம்பிப் போட்டுதாம். இருந்தாலும் அமுல்பேபியின்ர பட்டியல்தான் அமைச்சுக்குப் போகும் என்று கச்சேரிக்க கதை அடிபடுகுது. ஏனென்டா, தியேட்டர்காரரை விட அமுல்பேபிதான் 'பவர்' என்று பெரிய தலை தனக்குத் தெரிஞ்சாக்களுக்கு சொல்லியிருக்குது பாருங்கோ. கெதில தெரியும், தியேட்டர்காரரா அமுல்பேபியா 'பவரான' ஆக்கள் என்று.

-பட்சி

## பொறுப்புக்கூறலிருந்து...

மேற்கண்டவாறு கூறினார்.

'பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை இலங்கை உறுதி செய்ய வேண்டும். இவை மிகவும் அவசியம். இந்தக் கடமைகளிலிருந்து இலங்கை ஒருபோதும் விலக முடியாது' என்றார். (ஒ,22)

## போர்க்குற்றம்...

குறித்து உடனடியாகப் பரிசீலிக்கப்படாது எனவும் கொழும்பில் இன்று செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்க சட்டத்தின் பிரகாரமே பயணத் தடை விதிக்கப் பட்டது. சட்ட ரீதியாக அது சரியானது என்பதை மீண்டும் உறுதிப்படுத்த விரும்புகிறோம் எனவும் அவர் மேலும் கூறினார்.

இலங்கை இராணுவத்தின் தற்போதைய தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு கடந்த பெப்ரவரி முதல் அமெரிக்கா பயணத் தடை விதித்துள்ளது.

இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தின் போது இலங்கை இராணுவத்தின் 58 ஆவது பிரிவில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள், சட்டவிரோதக் கொலைகள் ஆகியவற்றுடன் அதன் கட்டளை அதிகாரியாக இருந்த சவேந்திர சில்வாவுக்கு பொறுப்புள்ளதாக கிடைத்த நம்பகமான தகவல்களை அடிப்படையாகக் கொண்டே அவருக்குப் பயணத் தடை விதிக்கப்பட்டது. அமெரிக்காவின் சட்டப் பிரிவு 7031 (சி) கீழ் இந்தத் தடை உறுதி செய்யப்பட்டது எனவும் பொம்பியோ சுட்டிக்காட்டினார்.

இந்தச் சரத்தின் கீழ் மனித உரிமை மீறல் அல்லது ஊழலில் வெளிநாட்டு அதிகாரிகள் ஈடுபட்டர் என நம்பகமான தகவல்கள் இருந்தால் அந்த நபர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் அமெரிக்காவுக்குள் நுழைய தகுதியற்றவர்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு விதிக்கப்பட்ட பயணத் தடையை மீள்பரிசீலனை செய்யுமாறு அமெரிக்காவிடம் இலங்கை கோரி வருகின்றது. சவேந்திர சில்வா மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் ஏதும் நிரூபிக்கப்படவில்லை எனவும் இலங்கை அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ,22)

## அபாயக் கட்டத்தில்...

கொழும்பின் சில பகுதிகளில் 7 நாள்கள் வரையில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் கொரோனாத் தொற்றுடன் பலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலையை அவதானிக்கும்போது, தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையிலும் நடமாட்டங்கள் இடம்பெற்றுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. பொதுமக்கள் வீடுகளிலேயே தங்கியிருந்தால், இவ்வாறான நிலைமை ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை. ஒருவர் தனிமைப்படுத்தப்பட்டிருந்த போதும் திருமண நிகழ்வொன்றுக்கு சென்ற சம்பவம் கூட பதிவாகியுள்ளது.

ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்குமாயின், அவர் தனது வீட்டிலேயே இருப்பாராயின், அவரின் வீட்டை ச் சார்ந்தவர்களுக்கு தொற்று ஏற்படுமே தவிர வெளிநபர்களுக்கு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை, என்றார். (ஒ,இ)

## ஊரடங்கு....

கொரோனா தடுப்புச் செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

30ஆம் திகதி வெள்ளிக்கிழமை விடுமுறை நாள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,22)



## மாலைதீவு....

ளார்.

மைக் பொம்பியோ நேற்று இரவு இலங்கைக்கு வருகை தந்திருந்த நிலையில், இன்று காலை ஜனாதிபதி கோத்தாபய மற்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினார்.

அதன் பின்னர் செய்தியாளர் மாநாட்டிலும் கலந்துகொண்ட அவர், கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்துக்கும் பயணம் செய்தார்.

அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து பிற்பகல் 1.06 மணியளவில் விசேட விமானத்தின் ஊடாக மாலைத்தீவை நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளார். (ஒ,இ)

## மணிவண்ணனின்

பாணம் மாநகர சபைக்குத் தேர்ந்து அனுப்பப்பட்ட வி.மணிவண்ணன், தமது பங்காளிக் கட்சியான தமிழ் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து நீக்கப்பட்டதால் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குமாறு அந்தக் கட்சி யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகரிடம் கேட்டுக்கொண்டது.

அதனடிப்படையில் வி.மணிவண்ணனின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் பதவி வறிதாகியதாக யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலரால் அவருக்கு அறிவிக்கப்பட்டது.

தனது உறுப்புரிமை நீக்கத்தை சவாலுக்குட்படுத்தி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் சட்டத்தரணி வி.மணிவண்ணன், சிறப்பு மனுவை தானே தாக்கல் செய்தார்.

மனுவின் பிரதிவாதிகளாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் அனுரதாசா, பொதுச் செயலர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகர் உள்ளிட்ட நான்கு தரப்பினரை மனுதாரர் குறிப்பிட்டிருந்தார்.

தனது பதவி நீக்கத்தை சட்ட வலுவற்றதாக உத்தரவிடுமாறு கோரிய மனுதாரர், அதன் மீதான விசாரணை நிறைவடைந்து இறுதிக் கட்டளை வரும் வரை இடைக்காலத் தடைக் கட்டளையை வழங்குமாறும் கோரியிருந்தார்.

இந்த மனு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி வி.இராமக்கமலன் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

மனுதாரரான சட்டத்தரணி வி.மணிவண்ணன், தனது மனுவை ஆதரித்து சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

இடைக்காலத் தடை உத்தரவை வழங்குமாறும் பிரதிவாதிகளை மன்றில் முன்னிலையாக அறிவித்தல் அனுப்புமாறும் அவர் கோரினார்.

மனுதாரரின் சமர்ப்பணத்தை ஆராய்ந்து இடைக்கால நிவாரணமான தடை உத்தரவு தொடர்பில் இன்று புதன்கிழமை கட்டளை வழங்குவதாக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் தவணையிட்டது.

மனு இன்று மாவட்ட நீதிபதி விநாயகமூர்த்தி இராமக்கமலன் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

'மனுதாரரின் மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு பிரதிவாதிகளை நவம்பர் 11ஆம் திகதி மன்றில் முன்னிலையாக அறிவித்தல் அனுப்ப உத்தரவிடப்படுகிறது.

மனுதாரரின் இடைக்கால நிவாரணமாக அவரை யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கம் தீர்மானத்துக்கு 14 நாள்கள் இடைக்காலத் தடை உத்தரவு விதிக்கப்படுகிறது, என்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி வி.இராமக்கமலன் கட்டளை வழங்கினார்.

கடந்த வாரம், காங்கிரஸிலிருந்து நீக்கப்பட்ட மற்றொரு உறுப்பினரான மயூரனின் பதவி நீக்கத்துக்கும் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,26)

# இலங்கையின் வளர்ச்சியை அமெரிக்கா உறுதி செய்யும்

## கோத்தாவிடம் பொம்பியோ எடுத்துரைப்பு

கொழும்பு, ஒக். 28
சகல இலங்கை சமூகத்துக்கும் நிலையான, சகலதும் அடங்கலான வளர்ச்சியை அமெரிக்கா உறுதிசெய்யும் என அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடனான சந்திப்பின்போது உறுதியளித்துள்ளார்.
சுகாதார, மனிதாபிமான, பொருளாதார விவகாரங்களில் அமெரிக்கா தொடர்ந்து இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் எனவும் மைக் பொம்பியோ உறுதியளித்தார் எனவும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள ருவிட்டர் செய்தியில் கூறப்பட்டுள்ளது.
அத்துடன் வெளிப்படையான வர்த்தக, முதலீட்டின் அடிப்படையிலான பொருளாதார பங்காண்மை, கொரோனா தொற்றுப் பரவலின் பின்னரான பொருளாதார மீட்சியின் முக்கிய அங்கங்கள் அதேபோல், ஜனநாயக சுதந்திரங்களுக்கான அமெரிக்காவின் பகிரப்பட்ட உறுதிப்பாடு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து மைக் பொம்பியோ இலங்கை ஜனாதிபதியுடன் கலந்துரையாடினார் என அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ இன்று காலை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவைச் சந்தித்தபோதே இந்த உறுதிமொழிகள் வழங்கப்பட்டன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, ஜனாதிபதியுடனான சந்திப்பைத் தொடர்ந்து வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவை மைக் பொம்பியோ சந்தித்தார்.
இறைமையுடைய, பாதுகாப்பான இலங்கைக்கான அமெரிக்காவின் உறுதிப்பாட்டை மீள் உறுதிசெய்யும் வகையில் இந்தச் சந்திப்பு அமைந்திருந்தது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள ருவிட்டர் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ,22)





## கோத்தா –பொம்பியோ நேருக்கு நேர் சந்திப்பு

### அலெய்னாவும் பங்கேற்பு

கொழும்பு, ஒக். 28
இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ, ஜனாதிபதி கோத்தாபயவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் இன்று காலை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.
கொரோனா பரவலுக்கு பின்னரான பொருளாதார உறுதிப்பாடு, இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக முதலீட்டு உடன்படிக்கைகள், இரு நாடுகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கும் பாதுகாப்பு கூட்டு நகர்வுகள் மற்றும் ஜனநாயக சுதந்திரங்களுக்காக பகிரப்பட்ட உறுதிப்பாடு பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.
இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ்ஸும் கலந்துகொண்டார். இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ நேற்று மாலை இலங்கையை வந்தடைந்திருந்தார். (ஓ,22)

## ஆரம்பப்புள்ளியின் மர்மம் நீடிப்பு புலன் விசாரணை தொடர்கிறது!

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 28
2 ஆவது அலையின் ஆரம்பப்புள்ளி எது என்று இன்னும் உறுதியாக கண்டறியப்படவில்லை. புலனாய்வு விசாரணைகள் தொடர்கின்றன. விரைவில் அது தொடர்பான தகவல்கள் வெளியிடப்படும் என்று கொரோனா ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா இன்று தெரிவித்தார்.
துருக்கியில் இருந்து இலங்கைக்கு வந்த உக்ரைன் விமான ஊழியர்களாலேயே கொரோனா மீண்டும் பரவியது எனவும், இதுவே 2ஆம் அலையின் ஆரம்பப்புள்ளி எனவும் சிங்கள தேசிய நாளிதழொன்று அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது. இது தொடர்பான புலனாய்வு அறிக்கை அரச உளவுப்பிரிவால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோருக்கும் பாதுகாப்பு சபையிடமும் கையளிக்கப்பட்டுள்ளன எனவும் அச்செய்தியில் கூறப்பட்டிருந்தது. இதன் உண்மைத் தன்மை எவ்வாறு என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இராணுவத் தளபதி மேற்படி தகவலை வெளியிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
2 ஆவது அலையின் ஆரம்பப்புள்ளி தொடர்பான புலனாய்வு விசாரணைகள் இன்னும் நிறைவுபெறவில்லை. அது தொடர்பில் பல கோணங்களில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அவ்வாறு முன்னெடுக்கப்பட்ட விசாரணையின்போதுதான் துருக்கியில் இருந்து வந்தவர்கள் தங்கிய ஹொட்டல் தொடர்பான தகவல் கிடைத்தது. இதன் ஊடாகவே வைரஸ் பரவியிருக்கும் என 80 வீதம் நம்புகின்றோம். மினுவாங்கொடவுக்கும், இதற்கும் தொடர்பு இருக்கின்றது. ஆனால் அதுவே இறுதி முடிவு அல்ல. வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் ஊடாகவே தொற்று பரவியிருக்கும் என்று நாம் ஏற்கனவே கூறியிருந்தோம். வான்வழி மற்றும் கடல்வழி என இரண்டிலும் வெளிநாட்டு தொடர்பு இருக்கின்றது. ஆகவே, நாலாபுறங்களிலும் புலன் விசாரணைகள் தொடர்கின்றன. விரைவில் ஆரம்பப்புள்ளி தொடர்பான தகவல்கள் உரிய வகையில் வெளியிடப்படும். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம் ஆரம்பப்புள்ளி தொடர்பான அறிக்கை இன்னும் கையளிக்கப்படவில்லை. விசாரணைகள் நிறைவடைந்திருக்கலாம் என்ற ஊகத்தின் அடிப்படையில் அந்த செய்தி வெளியிடப்பட்டிருக்கலாம், என்றார். (ஓ,44)

## தனிமைப்படுத்தப்பட்டோருக்கு உலர் உணவுப் பொருள்கள்

### பஸில் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 28
வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு பொருள்களைப் பொதி மூலமாக விநியோகிக்க அரசு கவனம் செலுத்தியுள்ளது என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுனர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.
வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு இரண்டு வாரங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய வகையில் உலர் உணவுப் பொருள்களை பொதி மூலமாக வழங்குவது தொடர்பாகப் பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி பணிக்குழு கவனம் செலுத்தியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். கடன் தவணைகளுக்குச் சலுகைக் காலம் வழங்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. ஒரு வார காலம் முழுமையாக மூடப்பட்ட பகுதிகளுக்கு 5 ஆயிரம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஓ,இ)

## கோத்தாக்கு அதிகாரம் வழங்கும் '20'இல் சபாநாயகர் கையெழுத்து

கொழும்பு, ஒக். 28
அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாளை கையொப்பமிடவுள்ளார்.
அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு கடந்த 22 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்றத்தில் இவ்வாறு நிறைவேற்றப்படும் சட்டத்தில், சபாநாயகர் கையொப்பமிட்ட பின்னரே அது நடைமுறைக்குவரும். அந்தவகையில் சபாநாயகர் நாளை '20' இல் கையொப்பமிடவுள்ளார். இதையடுத்து அச்சட்டம் நடைமுறைக்குவரும். இதன்மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளார். சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான நியமனங்களைக்கூட அவரே வழங்கவுள்ளார். (ஓ,44)



## அமெரிக்காவிடம்...

தொடர்ந்தும் பயணிக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.
அமெரிக்க இராஜாங்க செயலருடன் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அமெரிக்க இராஜாங்க செயலரின் வருகையானது, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவே கருதப்படுகிறது. இன்று உலகம் முழுவதும் கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஆசியாவிலேயே இலங்கைதான், பழமைவாய்ந்த ஜனநாயக நாடாகும்.
90 வருடங்களாக எமது மக்கள் வாக்குரிமையுடன் வாழ்ந்து வருகிறார்கள். இந்த நாட்டின் ஜனநாயகம் இன்னும் பலமாகவே உள்ளது என்பதை இறுதியாக இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் காண்பித்துள்ளன.
இந்த நாட்டின் ஐக்கியம், நல்லிணக்கம், தேசியப் பாதுகாப்பு தொடர்பாக நாம் உறுதியான நிலைப்பாட்டுடன் இருக்கிறோம். எமது நட்பு நாடுகளுடன், இணைந்து பணியாற்றவும் நாம் உறுதியாகவே இருக்கிறோம். அத்தோடு, பக்கச்சார்பற்ற அணிசேரா நாடாக இலங்கை தொடர்ந்தும் பயணிக்கும் என்பதையும் கூறிக்கொள்கிறோம். அந்தவகையில், அமெரிக்காவுடனும் ஏனைய நாடுகளுடனும் இலங்கை உறவுகளை வளர்த்துக்கொள்ளும், என்றார். (ஓ,இ)

# பேருந்துகளின் இலக்கங்களை தெரியுமாறு காட்சிப்படுத்துக

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் வேண்டுகோள்

கொழும்பு, ஒக்.28

பேருந்துகளின் இலக்கங்கள் நன்கு தெரியக்கூடிய வகையில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரச மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்களிடம் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கோரிக்கை விடுத்துள்ளார்.



பேலியகொட மீன் சந்தை மூலம் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட பலர் பொதுப்போக்குவரத்து சேவைகளில் பயணித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

எனினும் தாங்கள் பயணித்த பேருந்துகள் எவை என்பதை அடையாளப்படுத்துவதற்காக அதன் இலக்கங்களை அவர்களினால் நினைவுபடுத்திக் கூறமுடியாத நிலைமை உள்ளது.

இதன் காரணமாகவே, அரச மற்றும் தனியார் பேருந்து துறையினரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறோம்.

இதேநேரம், பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள், தாங்கள் பயணித்த பேருந்துகளின் இலக்கங்களை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இதனால் குறித்த பேருந்துகளில் கொரோனா நோயாளர் பயணித்திருந்தால், அந்தப் பேருந்தில் பயணித்த ஏனையவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு அறிவித்தல்களை வழங்க எங்களுக்கு இலகுவானதாக இருக்கும் என்றும் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

## விற்பனை நிலையங்கள் மீண்டும் திறப்பு

கொழும்பு, ஒக்.28

புறக்கோட்டையில் அமைந்துள்ள மொத்த விற்பனை நிலையங்களைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது என புறக்கோட்டை மொத்த விற்பனையாளர்கள் சங்கத்தின் செயலாளர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதன்படி தினந்தோறும் அதிகாலை 05 மணிமுதல் பிற்பகல் 02 மணிவரை விற்பனை நிலையங்களைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது.

கொரோனாத் தொற்று அச்சுறுத்தலை கருத்திற்கொண்டு நூற்றுக்கு 50 சதவீதமான ஊழியர்களை கொண்டு மொத்த விற்பனை செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வுள்ளன. அத்துடன் பொதுச் சுகாதார ஊழியர்களின் கண்காணிப்புடன் இவ் விற் பனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (வ-இ)

## திருமலை சட்டத்தரணிகள் பணிப் புறக்கணிப்பு

திருகோணமலை, ஒக்.28

திருகோணமலை சட்டத்தரணிகள் இன்றும் நாளையும் நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்பதில்லை என தீர்மானித்துள்ளனர் என சட்டத்தரணிகள் சங்கத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேலும், தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 அசாதாரண சூழ்நிலை காரணமாக பொதுமக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்கும் முகமாக திருகோணமலை சட்டத்தரணிகள் இன்று புதன்கிழமை மற்றும் நாளை வியாழக்கிழமை ஆகிய இரு தினங்களிலும் தமது நீதிமன்ற பணிகளில் இருந்து விலகி இருப்பதற்கு தீர்மானம் எடுத்துள்ளனர். இதேவேளை இன்றைய தினம் வழக்குகளுக்கு அழைப்பாணை கொடுக்கப்பட்டவர்களுக்கு மாற்றுத் திகதிகள் வழங்கப்பட்டு வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-45)

# 68 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்குச் சட்டம் அமுலில்

கொழும்பு, ஒக்.28

நாடாளாவிய ரீதியில் இதுவரை 68 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, களுத்துறை மாவட்டத்தின் அளுத்கம, பயாகல மற்றும் பேருவளை பொலிஸ் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு தொடர்ந்து அமுலிலுள்ளது. அத்துடன், கொழும்பு நகரின் 18 பொலிஸ் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பு நகரில் கோட்டை, புறக்கோட்டை, பொரளை மற்றும் வெலிக்கடை ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கொத்தட்டுவை மற்றும் முல்லேரியா ஆகிய பொலிஸ் பிரிவுகளிலும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மருதானை, தெமட்டகொட ஆகிய பகுதிகளுக்கும் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. கொட்டாஞ்சேனை, முகாத்துவாரம், மட்டக்குளி, கிரேண்ட்பாஸ், வெல்லம்பிட்டி மற்றும் புளூமெண்டல் ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கு ஏற்கனவே ஊரடங்கு அமுலிலுள்ளது. வடமேல் மாகாணத்தின் குளியாப்பிட்டிய, நாராம்மல, தும்மலசூரிய, பன்னல மற்றும் கிரியுல்ல ஆகிய பொலிஸ் பிரிவுகளிலும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் கம்பஹா மாவட்டத்தில் தொடர்ந்து ஊரடங்கு சட்டம் அமுலிலுள்ளது.

மறு அறிவித்தல் வரை குறித்த பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)





## கொத்மலை நகர் முடக்கம்: 10 குடும்பங்கள் தனிமையில்

கொத்மலை, ஒக்.28

கொத்மலை, பூண்டுலோயா எரோ தோட்ட பகுதியில் உள்ள ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து பத்து குடும்பங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன. அவருடன் தொடர்பை பேணியவர்கள் விபரங்களும் திரட்டப்பட்டு வரு கின்றன.

பேலியகொட மீன் சந்தையில் தொழில் செய்த ஒருவர் அண்மையில் வீடு திரும்பியுள்ளார். இவருக்கு மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனை முடிவு நேற்று வெளியானது. அதில் வைரஸ் தொற்று உறுதியானது.

இதனையடுத்து பூண்டுலோயா நகரம் இன்று தற்காலிகமாக மூடப்பட்டு தொற்றுநீக்கம் செய்யப்பட்டது. அதேவேளை, கொத்மலை பிரதேச சபைக்குட்பட்ட பகுதி மக்களிடம் பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. (ந)

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகளும் ஒத்திவைக்கப்பட்டன

கொழும்பு, ஒக்.28

2019 ஏப்ரல் 21ஆம் திகதியன்று இடம்பெற்ற தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அமர்வுகள் யாவும் எதிர்வரும் 31ஆம் திகதி வரையிலும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

கொரோனாத் தொற்றின் தாக்கத்தை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## தொடர்மாடி குடியிருப்பில் ஒருவருக்கு கொரோனா

கொழும்பு,ஒக்.28

கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள தொடர்மாடி குடியிருப்பில் வசிக்கும் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளானமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த நபர் வெளிநாடு செல்வதற்காக பி.சி. ஆர். பரிசோதனை செய்ய முற்பட்ட போதே அவருக்கு தொற்றுள்ளமை தெரிய வந்துள்ளது.

அவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரது வீட்டில் உள்ள இருவர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அந்த நபர், இந்தியப் பிரஜை எனவும் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# நானாட்டான் பிரதேச சபையில் கழிவு முகாமைத்துவ நிலையம்

மன்னார். ஒக்.28

நானாட்டான் பிரதேச சபையின் கழிவு முகாமைத்துவம் செய்வதற்கான இடம் நேற்றுக் காலை நானாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறிஸ்தகுமார் தலைமையில் பார்வையிடப்பட்டது

எதிர்காலத்தில் பிரதேசத்தில் உருவாகும் கழிவுகளை முகாமை செய்யவும் விஞ்ஞான முறைப்படி கழிவுகளை மீள் சுழற்சிக்கு உட்படுத்தி சேதனப்பசளை தயாரிப்பதற்காகவும் நானாட்டான் பிரதேச செயலகத்திடம் பொருத்தமான இடம் ஒன்றினை வழங்குமாறு நானாட்டான் பிரதேச சபை தவிசாளரால் கோரப்பட்டிருந்தது.

அதற்கு அமைவாக கொக்குடையான் பகுதியை பார்வையிட்டு நானாட்டான் பிரதேச சபையின் கழிவு முகாமைத்துவத்திற்கென 3 ஏக்கர் காணி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என நானாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறிஸ் கந்தகுமார் தெரிவித்தார்.




குறித்த பகுதிக்கான வன இலாகாவின் அறிக்கை கிடைத்தவுடன் முறைப்படி நானாட்டான் பிரதேச சபைக்கு காணி வழங்கப்படும் என்று நானாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறிஸ்கந்தகுமார் தெரிவித்தார்

நிகழ்வில் நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர், நானாட்டான் பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் வட்டார வன இலாகா அதிகாரி மற்றும் கிராம சேவையாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ந-213)

## விசாக் காலம் நீடிப்பு

கொழும்பு, ஒக்.28

இலங்கையில் உள்ள அனைத்து வெளிநாட்டினருக்கும் வழங்கப்பட்ட அனைத்து வகையான விசாக்களின் செல்லுபடிக் காலம் 60 நாட்களுக்கு நீடிக்கப்படுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் மீண்டும் அதிகரித்துள்ள கொரோனாப் பரவலையடுத்து டிசம்பர் 5 வரை விசாக்களின் செல்லுபடிக் காலம் நீடிக்கப்படுகிறது என குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது. (வ-இ)

## நிதி நிறுவனத்துள் கத்திக்குத்து: சந்தேகநபர் விளக்கமறியலில்

ஹொரவபொத்தானை நகரில் கடன் வழங்கும் நிதி நிறுவனம் ஒன்றுக்குள் வைத்து மூன்று பிள்ளைகளின் தாயாரை கத்தியால் குத்திய இளைஞரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர் ஹொரவ்பொத்தான வெலிமுவப்பொத்தான ,பஹல குபுகொல்லாவ பகுதியைச் சேர்ந்த டி.டி.லசந்த குமார சிங்க (22வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரவ பொத்தான நகர் கடன் வழங்கும் நிதி நிறுவனம் ஒன்றில் வைத்து நேற்றுமுன்தினம் கத்திக்குத்துக்கு இலக்கான குறித்த பெண், வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் கத்தியால் குத்திய சந்தேகநபரைக் கைதுசெய்து விசாரணை செய்த போது தன்னுடன் திருட்டுத்தனமாக பழகி தன்னை ஏமாற்றினார் எனவும், அந்தக் கோபத்திலேயே அவரை கத்தியால் குத்தினேன் எனவும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (ந-45)



## நாடாளுமன்றம் மீண்டும் திறப்பு

கொழும்பு, ஒக்.28

நாடாளுமன்ற வளாகத்தில் தொற்று நீக்கும் செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளன. அதையடுத்து இன்று மீண்டும் நாடாளுமன்றம் திறக்கப்படவுள்ளது. நாடாளுமன்ற பொலிஸ் பிரிவுடன் இணைந்திருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியமை உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து, நாடாளுமன்ற வளாகத்தை மூடி முற்றுமுழுதாக தொற்று நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி நேற்றும் நேற்று முன்தினமும் நாடாளுமன்ற வளாகம் முற்றும் முழுதாக தொற்று நீக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)



## சுற்றிவளைப்பு; 131 பேர் கைது

கொழும்பு, ஒக்.28

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 131 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று காலை 6 மணிமுதல் இன்று அதிகாலை 5 மணிவரையான காலப்பகுதியில் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவர்களுள் சட்டவிரோத மதுபானங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் 50 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வஇ)

## மேலும் 73 பேருக்கு தனிமை நிறைவு

கொழும்பு, ஒக்.28

முப்படையினரால் நடாத்தப்படும் 8 தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தல் செயற்பாட்டை நிறைவுசெய்து 73 பேர் இன்று வெளியேறியுள்ளனர். இதையடுத்து தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து வெளியேறியோர் எண்ணிக்கை 58 ஆயிரத்து 396 ஆக அதிகரித்துள்ளது.

முப்படையினரால் நடத்தப்படும் 75 தனிமைப்படுத்தல் நிலையங்களில் தற்போது 7 ஆயிரத்து 530 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# சுகாதார விதிகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### யாழ் மாநகர முதல்வர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.28

குருநகர், பாசையூர் பகுதி மற்றும் மீன் சந்தைகளில் சுகாதார நடைமுறைகளை மீறுவோர் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்

மேலும், குருநகர் பகுதியில் இருவருக்கு கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் இனிவரும் நாள்களில் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டியது அவசியம். அதிலும் குறிப்பாக குருநகர் ,பாசையூர் பகுதி மற்றும் மீன் சந்தை பகுதியில் சுகாதார நடைமுறை பொலிஸார் மற்றும் சுகாதார பிரிவினரால் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும். அங்கு வருபவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுவது அவசியம்.

குறித்த பகுதி மீன் சந்தைக்கு அப்பகுதியைச் சேர்ந்தவர்களோ அல்லது வெளியிடங்களிலிருந்து வருவோரோ கடும் இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியே செல்ல அனுமதிக்கப்படுவார்கள். இந் நடைமுறை நாளை (இன்று) காலையிலிருந்து அமுல்படுத்தப்படவுள்ளது. பொதுமக்கள் குறித்த விடயம் தொடர்பில் அவதானமாக செயற்படுங்கள். நடைமுறைகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

குருநகர் மற்றும் பாசையூர் சந்தைகளுக்கு வருவோர் கட்டாயமாக தமது பதிவினை மேற்கொண்ட பின்னரே அப்பகுதிக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என தெரிவித்துள்ளார். (ந-20)

# ‘நாம் வளம்பெற்று நாட்டை வளப்படுத்துவோம்’ மீள் சுழற்சி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.28

பாவனையின் பின் ஒதுக்கப்படும் வெற்று கார்பன் பேனா குழாய்கள் மற்றும் பற் தூரிகைகள் மீள் சுழற்சி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இதற்காக தயாரிக்கப்பட்ட முதலாவது கொள்கலன் நேற்றுமுன்தினம் ஜனாதி பதி அலுவலகத்தில் வைத்து சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர வால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விம் கையளிக்கப்பட்டது. பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் இந் நிகழ்ச் சித் திட்டம் “நாம் வளம்பெற்று நாட்டை வளப்படுத்துவோம்“ என பெயரிடப்பட்டுள்ளது.

அனைத்து பாடசாலைகளுக்கும் விசேட கொள்கலன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. “வெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் பிளாஸ்டிக்” நிறுவனம் இவற்றை கொள்வனவு செய்ய முன்வந்துள்ளது. இந் நிகழ்ச்சித் திட் டத்தை அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் நடைமுறைப்படுத்து வதை கட்டாயமாக்குவதற்கு அமைச்ச ரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாளொன்றுக்கு பாடசாலைகளில் இருந்து ஒதுக்கப்படும் கார்பன் பேனா குழாய்கள் சுமார் 80 கிலோ கிராம் களாகும். அத்துடன் இது வருடமொன் றுக்கு 29 ஆயிரம் கிலோவுக்கும் அதி கம் என மதிப்பிடப்பட்டுள்ளது. அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் இருந்து ஒதுக்கப்படும் அளவு இதுவரை யில் கணக்கிடப்படவில்லை. பாவனை யின் பின்னர் ஒதுக்கப்படும் பேனா மற்றும் பற் தூரிகைகள் உக்குவதற்கு 100 முதல் 500 வருடங்கள் செல்லும் என சூழலியலாளர்கள் தெரிவிக்கின்ற

## நாட்டின் சட்டத்துக்கு அமையவே துமிந்த விடுதலை

கொழும்பு, ஒக்.28

மரண தண்டனை குற்ற வாளியான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர் துமிந்த சில்வா விடுதலை குறித்த தீர்மா னம் நாட்டின் சட்ட கட்டமைப்பிற்கு அமை யவே இடம்பெறும் என அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக் கும் வாராந்த செய்தியா ளர் சந்திப்பு நேற்று தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற வேளையில், துமிந்த சில்வாவின் விடுதலைக்கான ஆவ ணத்தில் ஆளும் தரப்பில் எவரும் கைச்சாத்திட்டுள் ளனரா?” என எழுப்பப் பட்ட கேள்விக்கு பதில் கூறும் போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“அது குறித்து எனக்குத் தெரியாது, நான் எந்த ஆவணத்தையும் பார்க்க வில்லை” இருப்பினும் எந்தவொரு அமைப்புக் கும், எந்தவொரு தனி நபருக்கும் சிறையில் உள்ள எவரையும் விடு விக்க கோரிக்கை முன் வைக்க முடியும்.

ஆனால் தீர்மானங்கள் அனைத்துமே நாட்டின் சட்டத்திற்கு அமையவே முன்னெடுக்கப்படும். நடைமுறையில் உள்ள சட்டம், நீதிமன்ற கட்ட மைப்பிற்கு அமையவே செயற்பட முடியும்- என் றார். (ந-இ)

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது

நீர்கொழும்பு, ஒக்.28

ஹெரோய்னுடன் நபர் ஒருவர் நீர்கொழும்பு பகுதி யில் கைது செய்யப்பட் டுள்ளார். அவரிடம் இருந்து ஒரு கிலோ கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப் பட்டுள்ளது எனத் தெரிவிக் கப்படுகின்றது. மட்டக்கு ளிய பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (வ-இ)

## முடங்கியது மொரட்டுவ: 42 தொற்றாளர்கள் அடையாளம்

மொரட்டுவ, ஒக்.28

மொரட்டுவவில் மேற்கொள்ளப் பட்ட பி.சி.ஆர் பரிசோதனையை அடுத்து 42 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பேலியகொட மீன் சந்தையில் இனங் காணப்பட்ட கொரோனாத் தொற்றா ளர்களுடன் தொடர்பில் இருந்தவர் களை இனங்கண்டு மேற்கொள்ளப் பட்ட பரிசோதனையின்போதே இவர்கள் அடையாளம் காணப்பட்ட னர். குறித்த பரிசோதனையின் பின்னரே மொரட்டுவ பகுதிக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது என இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொரளையில் 20 பேருக்கும் கொட்டாஞ்சேனையில் 44 பேருக்கும் மட்டக்குளியில் 36 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

## திருகோணமலையில் 9 தொற்றாளர்கள்

திருகோணமலை, ஒக்.28

திருகோணமலை மாவட்டத்தில் 9 கொரோ னாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள னர் என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.லதாகரன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கி ழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் பேலியகொட மீன் சந்தையுடன் தொடர்புபட்ட 283 பேருக்கு இன்று (நேற்று) வரைக்கும் பி.சி.ஆர் பரிசோத னைகள் மேற்கொள்ளப்பட்டன. திருகோணமலை மாவட்டத்தில் 132 பேருக் கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 75 பேருக் கும், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு உட்பட்ட பொத்துவில், கல்முனை தெற்கு போன்ற பகுதிகளில் 76 பேருக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன் னெடுக்கப்பட்டன. இதேவேளை கிழக்கு மாகா ணத்தில் இன்று (நேற்று) வரைக்கும் மட்டக்க ளப்பில் 28 பேரும், கல்முனையில் 9 பேரும் உட்பட 46 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் காத்தான்குடி தள வைத்தியசாலை யில் 180 பேரும், கரடியனாறு ஒருநாள் சிகிச்சை நிலையத்தில் 87 பேரும் ஈச்சிலம்பற்று வைத்தியசாலையில் 92 பேரும் பதியதலாவ வைத்தியசாலையில் 65 பேரும் பாலமுனை வைத்தியசாலையில் 71 பேரும் உட்பட கிழக்கு மாகாணத்தில் கொரோனா சிகிச்சை நிலையம் ஐந்திலும் 495 நோயாளர்கள் சிகிச்சைபெற்று வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார். (ந-45)

## ஊரடங்கு பகுதிகளில் மின் துண்டிக்கப்படாது

கொழும்பு, ஒக்.28

ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ள பகுதிகளில் மாதாந்த மின் கட்டண விதிகளின் அடிப்ப டையில், மின் இணைப்பு துண்டிக்கப்படாது என மின் சக்தி அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று காரண மாக தனிமைப்படுத்தல் ஊர டங்கு உத்தரவு அமுலில் உள்ள கம்பஹா மாவட்டம் உட்பட நாட்டின் பிற பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் நிறுவனங்களின் மாதாந்த கட்டணங்கள், அவை செலுத்துவதற்கான கால அவகாசத்தின் அடிப்படையில் துண்டிக்கப்படாது என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

நாட்டில் நிலவும் நெருக்கடி யான சூழ்நிலையை எதிர் கொள்ள தடையற்ற மின்சா ரத்தை வழங்குவதுடன் பாதிக் கப்பட்ட நுகர்வோருக்கு நிவா ரணம் வழங்கவும் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்ப டும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-இ)

## தனிமைப்படுத்தப்படும் வீடுகளில் மற்றுமொரு அறிவித்தல்

கொழும்பு, ஒக்.28

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவோர் உள்ள வீடுகளில், மற்றுமொரு அறிவித்தலை யும் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படு கிறது என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதா வது, சுகாதார அதிகாரிகளின் அறிவித்தல்க ளுக்கு மேலதிகமாக, இந்த அறிவித்தலையும் காட்சிப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது

இந்த அறிவித்தலுக்கு அமைய, அந்த வீடுகளில் தங்கியிருப்பவர்கள், அங்கிருந்து வெளியேற முடியாது என்பதுடன், வெளிநபர் கள் அந்த வீடுகளுக்குச் செல்ல முடியாது. அறிவித்தலில், தனிமைப்படுத்தப்பட்டவர்கள் வசிக்கும் பிரதேசத்தின் பிரதேச செயலாளர், பொலிஸ் பொறுப்பதிகாரி, கிராம சேவகர் ஆகியோரின் தொலைபேசி இலக்கங்களும் அந்தப் பகுதியில் இராணுவ அதிகாரி ஒருவர் இருப்பராயாயின் அவரின் தொடர்பு இலக்க மும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

இவ்வாறான நிலையில், தங்களுக்கு அவசிய தேவை ஏற்படும் நபர்கள் இந்த இலக்கங்க ளைத் தொடர்புகொண்டு, தேவையான உதவி களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மருத்துவமனை செல்வது தவிர்ந்த, ஏனைய எந்தவொரு அவசர சந்தர்ப்பம் ஏற்படும் சமயத்திலும் அந்த அறிவித்தலில் குறிப்பி டப்பட்டுள்ள இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ள முடியும். எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர், இந்த அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (வ-இ)







# யாழில் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை

## யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழில் சுகாதார நடைமுறையினை பின்பற்றாத நிலைமை காணப்படுகின்றது என யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் சேனாரட்ன தெரிவித்துள்ளார்

யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் இன்றையதினம் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட கொரோனா விழிப்புணர்வு செயற்பாட்டில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் மாவட்டதில் சுகாதார திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை மக்கள் பின்பற்றுவதாகத் தெரியவில்லை அவர்கள் ஏன் அவ்வாறு செய்கிறார்கள் என்று எனக்கு புரியவில்லை. குறிப்பாக வீதிகளில் முகக்கவசம் அணியாது பயணிக்கிறார்கள். இதனை நாம் தடுத்து நிறுத்த வேண்டும்.

நான் யாழ்ப்பாண பொதுமக்களிடம் தயவாக ஒரு கோரிக்கையினை முன்வைக்க விரும்புகின்றேன். நீங்கள் அனைவரும் கட்டாயமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுங்கள். யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது சிலர் தொற்றுக்குள்ளாகி உள்ளனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும்.

குறிப்பாக பேருந்துகளில் ஆசன பிரமாணத்திற்கு ஏற்றவாறு பயணிகளை ஏற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அது கட்டாயமாக பின்பற்றப்பட வேண்டும். அதிலும் பேருந்தில் பயணம் செய்வோர் கட்டாயமாக நீங்கள் பயணம் செய்யும் பேருந்தின் இலக்கம் தொடர்பான விவரங்களை சேகரித்து வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் எங்காவது ஒருவருக்கு தொற்று ஏற்படுமாக இருந்தால் நீங்களும் சில வேளைகளில் பேருந்தில் பயணம் செய்த தன் காரணமாக சில வேளைகளில் சுகாதார நடவடிக்கைக்கு உட்படுத்தப்படலாம். எனவே பொதுமக்கள் குறித்த விடயங்கள் தொடர்பில் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும். மக்களைப் பாதுகாப்பதற்காகவே சுகாதார நடைமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் வழமையான செயற்பாடுகளின்போது ஒரு மீற்றர் சமூக இடைவெளியை கட்டாயமாகப் பேணுங்கள். யாழில் மேலும் தொற்றுப் பரவாமல் இருப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென நான் தய வாக கேட்டுக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார். (ந-111)

## யாழ்ப்பாணத்தில்...

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்ப்பாண பொலிஸாரினால் யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் கொரோனா - 19 விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

குறித்த விழிப்புணர்வு செயற்பாட்டில் யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், யாழ். பிரிவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் யாழ்.பொலிஸார் கலந்து கொண்டனர்.

மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் முகமாக பேருந்துகளில் ஸ்டிக்கர் ஒட்டும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதோடு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுதல் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. (ந-111)

## மன்னாரில்...

மன்னார், ஒக் 28

மன்னார் புதிய பேருந்து நிலையத்தில் கொரோனா விழிப்புணர்வு செயற்பாடுகளுடன் தொற்று நீக்கிகளும் விசிறப்பட்டன.

மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல்ல வீரசிங்க தலைமையில் இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் இணைந்து இன்று காலை எட்டு மணியளவில் மன்னார் புதிய பேருந்து நிலையத்தில் சேவைக்காக நிறுத்தப்பட்டிருந்த அரச மற்றும் தனியார் பேருந்துகளுக்கு கொரோனா விழிப்புணர்வு ஸ்ரிக்கர்கள் ஒட்டியதுடன் பேருந்துகளுக்கு தொற்று நீக்கிகளும் விசிறப்பட்டது. (ந-213)





# கொழும்பில் தொற்றாளர்கள் 937

கொழும்பு, ஒக்.28

கொழும்பில் கடந்த 9 நாட்களில் நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 937 கொரோனா நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். இந்த தகவலை கொழும்பு மாநகர சபையின் பிரதம மருத்துவ அதிகாரி றுவான் விஜேமுனி தெரிவித்தார்.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டவர்களில் 337 பேர் பேலியகொட கொரோனா கொத்தணியுடன் தொடர்புபட்டவர்கள். ஏனைய 660 பேரும் பேலியகொடவில் கண்டுபிடிக்கப்பட்ட முதல் தொற்றாளரை அடுத்து 4,000 பேருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கண்டறியப்பட்டவர்கள். எனினும் 937 நோயாளிகளும் ஒரேநாளில் நடத்தப்பட்ட சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டவர்கள் என ஊடகங்களில் வெளியான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என மருத்துவர் விஜேமுனி மறுத்துள்ளார். (ந-இ)

## கிளிநொச்சியில்...





கிளிநொச்சி, ஒக்.28

கிளிநொச்சி பொலிஸாரால் விசேட கொரோனா பாதுகாப்பு விழிப்புணர்வு செயற்திட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதனடிப்படையில் காலை 8 மணியளவில் கிளிநொச்சி நகரில் சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பேருந்துகள் சுத்திகரிக்கப்பட்டதுடன், பொது மக்களை விழிப்பூட்டும் ஸ்ரிக்கர்களும் ஒட்டப்பட்டன.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி பொலிஸ் அத்தியட்சகர், உதவி அத்தியட்சகர், தலைமை பொலிஸ் நிலைய அதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள் மற்றும் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ந-6)



# கச்சதீவை மீட்க வேண்டும்

சென்னை, ஒக்.28

கச்சதீவை மீட்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்கு தலைக் கண்டித்து அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளாதாவது,

‘மன்னார் வளைகுடாவில் மீன்பிடிக்கச் சென்ற ராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை, படகுகளில் இருந்து கற்களை வீசித் தாக்கி இருக்கிறது. இதில் மீனவர் ஒருவரின் மண்டை உடைந்துள்ளது. பலர் காயம் அடைந்துள்ளனர். நூற்றுக்கணக்கான மீன் வலைகளையும் படையினர் அறுத்து எறிந்துள்ளனர்.

கடந்த 40 ஆண்டுகளாகவே, தமிழக மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் தாக்கப் படுகின்றார்கள். கிட்டத்தட்ட 600க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை சுட்டுக் கொன்றுள்ளது. ஆயிரக்கணக்கான மீனவர்களைப் பிடித்துக்கொண்டு போய், பல மாதங்கள் சிறையில் அடைத்துத் துன்புறுத்தினர், படகுகளைப் பறித்தனர், பெருந்தொகையைத் தண்டமாக வாங்கியே விடுவித்தனர். இந்தப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம், கச்சத்தீவை இலங்கையிடம் ஒப்படைத்ததுதான். அதை மீட்கக் கோரி, தமிழக மக்கள் எழுப்புகின்ற குரலை, இந்திய அரசு கண்டுகொள்வது இல்லை எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)



# மதரஸாவில் குண்டுவெடிப்பு 7 பேர் சாவு;109 பேர் படுகாயம்

இஸ்லாமபாத், ஒக்.28

பாகிஸ்தானின் பெஷாவார் பகுதியில் மதராஸா ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 7பேர் கொல்லப் பட்டுள்ளனர். 109 பேர் காயமடைந் துள்ளனர்.

மதரஸாவில் அடையாளம் தெரியாத நபர் ஒருவர் சந்தேகத்திற்கிடமான பையொன்றை விட்டுச் சென்ற சில நிமிடங்களிலேயே இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பலர் ஆபத்தான நிலையில் மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும் அஞ்சப்படுகிறது. (வ-இ)

## கட்டுப்பாடுகளுக்கு இத்தாலியர் எதிர்ப்பு

இத்தாலியில் கொரோனாவின் இரண்டாவது அலையைத் தடுப்பதற்கான புதிய கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள் வெடித்துள்ளன. டூரின் உட்பட பல முக்கிய நகரங்களில் மோதல்கள் பதிவாகியுள்ளன. பொலிஸார் மீது பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டுள்ளன. எதிர்ப்பாளர்களை கலைக்க மிலன் நகரில் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உணவகங்கள், மதுபானசாலைகள், உடற்பயிற்சி நிலையங்கள் மற்றும் சினிமா திரையரங்குகள் ஆகியவற்றை மூடுவதற்கு அரசாங்கத்தின் உத்தரவு நடைமுறைக்கு வந்தவுடன் இந்த போராட்டங்கள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ளன. (வ-இ)


## தேசிய போர் நினைவாலயத்தில் மைக் பொம்பியோ அஞ்சலி

புதுடில்லி, ஒக்.28

இந்தியா சென்றிருந்த அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ மற்றும் அமெரிக்கா பாதுகாப்பு செயலாளர் மார்க் எஸ்பேர் ஆகியோர் நேற்றுக் காலை புதுடில்லியில் உள்ள தேசிய போர் நினைவாலயத்துக்கு சென்று அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

தொடர்ந்து, உலகின் மிகப்பெரிய ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு தங்கள் உயிரைக் கொடுத்த துணிச்சலான ஆண்களையும் பெண்களையும் நாங்கள் ஒருபோதும் மறக்க மாட்டோம் என மைக் பொம்பியோ தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (வ-இ)





## நிலாவில் தண்ணீர்; உறுதிசெய்தது நாசா

நியூயோர்க், ஒக்.28

நிலவில் சூரிய ஒளி படும் மேற்பரப்பில் தண்ணீர் இருப்பதை அமெரிக்காவின் தேசிய விண்கல மற்றும் விண்வெளி ஆய்வு மையம் நாசா உறுதி செய்துள்ளது. நாசாவின் பறக்கும் ஆய்வக விமானமான சோஃபியா மேற்கொண்ட ஆய்வில் நிலவின் மேற்பரப்பில் தண்ணீர் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

சந்திரனின் தெற்கு அரைக்கோளத்தில் அமைந்துள்ள, பூமியிலிருந்து தெரியும் மிகப் பெரிய பள்ளங்களில் ஒன்றான ‘கிளாவியஸ்’ பள்ளத்தில் நீரின் மூலக்கூறுகளை சோஃபியா கண்டறிந்துள்ளது என நாசா தெரிவித்துள்ளது. சந்திரனில் இவ்வாறு காணப்படும் தண்ணீர் அதிகளவில் இருக்கலாம் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் சந்திரயான் 1 விண்கலம் கடந்த 2009 ஆம் ஆண்டில் சந்திரனின் மேற்பரப்பில் முதன்முதலில் தண்ணீரைக் கண்டுபிடித்தது. இருப்பினும், ஆராய்ச்சியாளர்களால், அது நீரின் மூலக்கூறா அல்லது ஹைட்ராக்சில் மூலக்கூறா என கணிக்க முடியவில்லை. தற்போது நிலவில் தண்ணீர் இருப்பதை நாசா உறுதி செய்திருக்கிறது. (வ-இ)

# கொரோனா உயிரிழப்புக்கு வளிமாசடைவு காரணமா?

### ஆய்வில் புதிய தகவல்

வளி மாசடைவின் நீண்டகால வெளிப்பாடும் கொரோனா உயிரிழப்புகளுக்கு காரணம் என ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. இதுவரை உலகில் பதிவான கொரோனா மரணங்களில் 15 வீதமான மரணங்களுக்கு வளி மாசடைவின் நீண்டகால வெளிப்பாடும் காரணம் என்பது கண்டறியப்பட்டுள்ளது. மாசடைந்த வளியிலுள்ள துகள்களை சுவாசிப்பதால் கிருமித்தொற்று மேலும் மோசமடைகின்றது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். கொரோனாத் தொற்றினால் அதிகளவு உயிரிழப்புகள் பதிவான அமெரிக்கா, இந்தியா, பிரேசில், போன்ற நாடுகளில் வளி மாசடைவு நீண்டகாலமாக காணப்படுகிறது. இதேவேளை கொரோனா வைரஸால் ஏற்பட்ட மரணங்களில் 29 வீதமானவை கிழக்கு ஆசியாவில் பதிவாகியுள்ளன. கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றில் வளி மாசடைவு பிரச்சினை நீண்டகாலமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)